**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2025 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 11-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

**O.S. NO**. 56/2023

**வா.சா.** 1

**திரு. வெங்கடாசலம்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை ( பிரதிவாதி தரப்பில்)**

நான் 15 ஏக்கர் வைத்து விவசாயம் செய்து வருகிறேன். குணசேகரன் எனக்கு எப்படி பழக்கம் என்றால் என் மகள் வீட்டிற்கு பக்கத்தில் குடியிருக்கிறார். என்னுடைய முதல்நிலை பிரமாண வாக்குமூலத்தின் 12 வது பத்தியில் பிரதிவாதியுடன் சமரசம் செய்யப்பட்டு தாவா தொகையில் ஒரு பகுதியாக ரூ.10,00,000/- பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் மொத்தமாக ரூ.22,00,000/-த்திற்கு பைசல் பேசினேன் என்றால் சரிதான். மீதம் ரூ.12,00,000/- பிரதிவாதி செலுத்தினால் போதுமானது என்றால் சமரசத்தில் 6 மாதம் காலக்கெடு நிர்ணயம் செய்யப்பட்டது. மேற்படி 6 மாத காலத்திற்குள் அவர் பணம் செலுத்தவில்லை. எனவே மீதித் தொகையான ரூ..12,00,000/-த்திற்கு அவர் வட்டி செலுத்தவேண்டும்.